தலைப்பு 251 மதிப்பீட்டு திணைக்களம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 251 - மதிப்பீட்டுத் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் மதிப்பீட்டு திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2025 மே மாதம் 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 ஆகஸ்ட் 07 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

மதிப்பீட்டு திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுகளில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் மதிப்பீட்டு திணைக்களத்தின், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை மதிப்பீட்டு திணைக்களத்தின், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் (பொருத்தமான வகையில்) பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருந்தன

(ஆ) கடந்த வருடத்திற்கு உரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

3. நிதி மீளாய்வு

3.1 வருமான முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் ஆரம்பத்தில் நிலவிய ரூபா. 896,496,121 நிலுவைத் தீர்வை வருமானத்தில், மீளாய்-வுக்கு உட்பட்ட ஆண்டில் ரூபா. 149,765,247 அல்லது 16.7 சதவீதம் மட்டுமே அறவிடப்பட்டிருந்தது. மேலும், கணக்காய்-வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் இறுதியில் நிலவிய ரூபா. 748,730,874 மொத்த	மதிப்பீட்டுப் பணிகளுக்காக அறவிடப்படும் கட்டணம் மிக அதிகமாக இருத்தல், மதிப்பீட்டுக் கோரிக்கை-யிலிருந்து மதிப்பீடு வரை எடுக்கும் காலப்பகுதியில் சொத்துக்களை அப்புறப்-படுத்துதல், சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தேவை மாறுதல் போன்ற காரணங்களால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ள-தாகவும், முறையான உடன்படிக்கை இல்லாத காரணத்தினால் சட்ட நடவடிக்கை எடுக்க முடியாமையும் இந்த	நிலுவையில் உள்ள தீர்வை வருமானத்தை அறவிடுவதற்கு பொருத்தமான மற்றும் முறையான வழிமுறையொன்றை இனங்கண்டு நடைமுறைப்படுத்தல் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

	நிலுவைத் தீர்வை வருமானத்தில் 90.47 சதவீதம் அதாவது ரூபா. 677,342,621 என்பது 10 நிறுவனங்களுடன் தொடர்புடையது. இதில் 66.48 சதவீதமானது நகர அபிவிருத்தி அதிகார-சபை (UDA), (S.W.R.D) பண்டார-நாயக்க ஞாபகார்த்த தேசிய மன்றம், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு ஆகிய நிறுவனங்களிட-மிருந்து அறவிடப்பட வேண்டிய-தாகும். இருப்பினும், சம்பந்த-ப்பட்ட நிறுவனங்களுடன் முறையான இணக்கப்-பாட்டுக்கு வந்து, நிலுவைத் தீர்வை வருமானத்தை அறவிடுவதற்கு பொரு-த்தமான மற்றும் வினைத்திறனான பொறிமுறையொன்றை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்துவதற்கு திணைக்களம் 2025 மே 31 வரை தவறிவிட்டிருந்தது.	நிலைமைக்குக் காரணமாக அமைந்துள்ளதாகவும் கண்டறியப்பட்டதால், நிதி அமைச்சினால் மதிப்பீட்டு முறைமை திருத்தப்பட்டு, குறைந்த கட்டணங்களைக் கொண்ட முறையான வழிமுறைகள் 2023 யூன் 01 ஆம் திகதி முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இந்த மதிப்பீட்டு கோவைகளில் (files) பெரும்பாலானவை மிகப்-பழமையான கோவைகள் என்பதால், சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் பணத்தைச் செலுத்தி இந்த மதிப்பீட்டு அறிக்கைகளைப் பெற நடவடிக்கை எடுக்காத காரணத்தினால், நிதி அமைச்சின் அறிவுறுத்தல்-களின்படி இந்த பழைய நிலுவைகளை கைவிடுவ-தற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.	
(ஆ)	2008-2013 காலப்-பகுதிக்குரிய, நகர அபிவிருத்தி அதிகாரசபை (UDA) மற்றும் இலங்கை காணி அபிவிருத்தி மற்றும் மீட்டெடுப்புக் கூட்டுத்-தாபனம் என்பவற்றி-லிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தீர்வை வருமானம் தொடர்பில் முறையான பதிவுகள் பேணப் படாமையால் (மதிப்பீடு செய்த மாகாண அலுவலகத்தை அடையாளம் காண முடியாமையினால்) முறையே ரூபா. 171,814,919 மற்றும் ரூபா. 9,547,400 ஆகியன 2025	நகர அபிவிருத்தி அதிகாரசபை (UDA) மற்றும் இலங்கை காணி அபிவிருத்தி மற்றும் மீட்டெடுப்புக் கூட்டுத்-தாபனம் என்பவற்றுக்குரிய மதிப்பீட்டுக் கோவைகள் ஆரம்பிக்கப்பட்ட போது, அதன் பணிகள் தலைமை அலுவலகத்தில் ஒரு தனிப் பிரிவினால் செயற்படுத்தப்-பட்டதன் காரணமாக, இந்தக் தகவல்களை மாகாண அலுவலகங்க-ளிலிருந்து பெற்றுக்-கொள்வது கடினமாகியு-ள்ளது. சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு தலைமை அலுவலகத்தில் உள்ள தகவல்களை வழங்குவதன் மூலம் இந்தக் கோவைகள் தொடர்பான மேலதிக	மதிப்பீட்டு கடிதக்-கோவைகள் தொடர்பில் போதியளவு உள்ளக கட்டுப்பாட்டு திட்டங்களை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

	மே 31 வரை அறவிடப்படாமல் முன்னோக்கிக் கொண்டு-வரப்பட்டு வருகின்றன. மேலும், நிலுவை வருமான அறிக்கைப்படி, நிறுவனத்தை அடையாளம் காண முடியாத 04 கோ-வைகளுக்குரிய ரூபா. 478,320 மற்றும் கோவை இலக்கம் குறிப்பிடப்படாத 04 மதிப்பீட்டு வருமானக் கோவைகளுக்குரிய மொத்தம் ரூபா. 365,135 நிலுவை வருமானம் காணப்பட்டது. இருப்பினும், அந்த நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு அல்லது அது தொடர்பாகப் பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுப்பதற்கு திணைக்களம் 2025 மே 31 வரை சாதகமான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.	நடவடிக்கைகள் மேற்-கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறு தகவல்கள் வழங்கப்படும் கோவை-களுக்குரிய மதிப்பீட்டு அறிக்கைகளைப் பெற சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் எதிர்பார்க்காததன் காரணமாகவே இந்த நிலுவைகளைத் தீர்த்துக்கொள்வது கடினமாகியுள்ளது.	

3.2 செலவின முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(m)	நிதி பிரமாணக் குறிப்பு 50(II) இன் பிரகாரம், வருடத்திற்கான செலவு மதிப்பீடுகளை முடிந்த-வரை முழுமையாகவும் சரியாகவும் தயாரிப்பது கணக்கீட்டு உத்தியோ-கத்தரின் பொறுப்பாகும். இருப்பினும், மீண்டுவரும் செலவினப் பிரிவுகள் 04 இல் மொத்தமாக ரூபா. 11,633,182 ஒதுக்கீடு-களில், மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் முடிவில் மொத்தமாக ரூபா. 2,580,408 ஒதுக்கீடுகள் எஞ்சி இருந்தன. இது	• **1102 - வெளிநாட்டுப் பயணச் செலவுகள்** வரவுசெலவுத் திட்டச் சுற்றறிக்கை மூலம் இந்தக் செலவுகளைக் கட்டுப்படுத்தல். • **1203 - உணவு, பானங்கள் மற்றும் சீருடைகள்** சீருடைக்கு உரிமை-யுள்ள உத்தியோகத்-தர்கள் இடமாற்றம் பெற்று வராமை .	வருடாந்த செலவின மதிப்பீடுகளை இயன்ற வரை முற்றுமுழுதாக செவ்வையாக தயாரித்தல் வேண்டும்.

ஒவ்வொரு செலவினப் பிரிவிற்கும் ஒதுக்கப்பட்ட நிகர ஒதுக்கீட்டில் 12 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டதாக அவதானிக்கப்பட்டது.

- **1409138 - இயந்திரங்கள் மற்றும் அலுவலக உபகரணங்க-ளுக்கான சேவை உடன்படிக்கைகள்**

பழைய உபகரணங்-களை அகற்றுதல் மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களுக்கு உத்தரவாதக் காலம் (warranty period) முடிவடையாமை.

- **1506 - அரச உத்தியோகத்தர்களுக் கான ஆதன கடன் வட்டி**

புதிய கடன் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படாமை மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு வங்கியில் அனுமதி வழங்கப்படாமை.

- **2001 - கட்டிடங்கள் மற்றும் கட்டுமானங்கள்**

திணைக்களத்தின் திருத்த வேலைகளை வருடத்திற்குள் செயற்படுத்த முடியாமை.

- **2002 - இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள்**

மின்தூக்கியின் எதிர்பார்த்த திருத்தம் இந்த வருடத்தில் மேற்கொள்ளப்படாமை மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரங்களுக்கு உத்தரவாதக் காலம் முடிவடையாமை.

		• **2401 - பதவியணி பயிற்சி** வரவுசெலவு திட்டச் சுற்றறிக்கை 2024/01 மூலம் வெளிநாட்டுப் பயிற்சியில் பங்கேற்பதற்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமை.	
(ஆ)	2024 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டத்தின்படி மொத்த மூலதனச் செலவுக்காக ரூபா. 103,000,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், மூலதனச் செலவினப் விடயங்கள் 2001, 2002 மற்றும் 2401 இன் கீழ் எதிர்பார்க்கப்பட்ட பணிகள் அடையாளம் காணப்படவில்லை. அத்துடன், வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதியில் முறையே ரூபா. 10.9 மில்லியன், ரூபா. 04 மில்லியன் மற்றும் ரூபா. 10.6 மில்லியன் என 44 சதவீதம் முதல் 82 சதவீதம் வரையிலான வீதங்களில் மீதங்கள் காணப்பட்டன.	• **2001 - கட்டடங்கள் மற்றும் கட்டுமானங்கள்** திணைக்களத்தின் திருத்த வேலைகளை வருடத்திற்குள் செயற்படுத்த முடியாமை. • **2002 - இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள்** மின்தூக்கியின் எதிர்பார்த்த திருத்தம் இந்த வருடத்தில் மேற்கொள்ளப்படாமை மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரங்களுக்கு உத்தரவாதக் காலம் முடிவடையாமை. • **2401 - பதவியணி பயிற்சி** வரவுசெலவுத் திட்டச் சுற்றறிக்கை 2024/01 மூலம் வெளிநாட்டுப் பயிற்சியில் பங்கேற்பதற்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமை	-அதே-

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 முகாமைத்துவ குறைப்பாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்குச் சொந்தமான சேதமடைந்த	2023.08.13 அன்று இலங்கை போக்குவரத்துச் சபையின்	மதிப்பீட்டு அறிக்கைகளை வழங்கும்போது

	வாகனத்தின் மதிப்பீட்டுப் பணியை மேற்கொண்ட திணைக்களத்தின் உதவி மதிப்பீட்டு உத்தியோகத்தரால் வாகனத்தில் பழுதுபார்க்கக்கூடிய சிறிய சேதங்களை அவதானித்து அறிக்கையிட்டிருந்தார். மேலும், சிரேஷ்ட மதிப்பீட்டாளரின் அறிவுறுத்தலின் பேரில், மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் பரிசோதனை உத்தியோகத்தரின் பரிசோதனை அறிக்கையொன்றும் பெறப்பட்டிருந்தது. அந்தப் பரிசோதனை அறிக்கையின்படியும், வாகனத்தை பழுதுபார்த்த பின் பயன்படுத்த முடியும் எனப் பரிந்துரைக்கப்பட்டி-ருந்தது. அவ்வாறிருந்தும், வாகனத்தைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகப் பரிந்துரைத்த இலங்கை போக்குவரத்துச் சபையின் வடமேல் பிராந்தியப் பொறியியல் முகாமையாளரால், பொலிஸிற்கு வழங்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு, சிரேஷ்ட மதிப்பீட்டாளர் பிரதி பிரதம மதிப்பீட்டாளருக்கு வழங்கிய குறிப்பொன்றின் பிரகாரம், வாகனத்தின் நட்ட ஈட்டுச் செலவு ரூபா. 11,000,000 என மதிப்பிடப்பட்டு அறிக்கையிடப்பட்டிருந்தது.	பிராந்தியப் பொறியியல் அலுவலகத்தினால் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு வழங்கப்பட்ட வாகனச் சேதங்கள் தொடர்பான மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையில் எமது மதிப்பீடு வழங்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையின்படி, இந்த ஜீப் வண்டியின் வெளிப்புறப் பகுதிகள் அனைத்தும், உட்புறப் பயணிகள் ஆசன உறைகள் என்பன கடுமையாகச் சேதமடைந்துள்ளதால் இந்த வாகனம் பயன்படுத்த முடியாத நிலைமைக்கு வந்துள்ளது. களப் பரிசோதனைக்குப் பின்னர் உதவி மதிப்பீட்டாளரால் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் மற்றும் தகவல்களின் அடிப்படையில் முன்மொழியப்பட்ட ரூபா. 11,000,000/- என்ற மதிப்பீட்டு பெறுமதியை அங்கீகாரத்திற்காகப் பரிந்துரைக்கும் போது, உதவி மதிப்பீட்டாளரால் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களை சிரேஷ்ட மதிப்பீட்டாளர் கவனத்தில் கொண்டுள்ளார்.	ஏற்படக்கூடிய முறைகேடுகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(ஆ)	தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்காக இல. 321/1/ஏ, ஹைலெவல் வீதி, மாக்கும்புர, பன்னிப்பிட்டிய முகவரியில் அமைந்துள்ள கட்டிடத்தை வாடகைக்கு	சம்பந்தப்பட்ட கோவை இதுவரை ஆவணக் காப்பகத்தில் கண்டுபிடிக்கப்படவில்லை. இருப்பினும், இரண்டாவது வாடகை திருத்தம் தொடர்பான மதிப்பீட்டில் எங்களால் அறிவிக்கப்பட்ட	மதிப்பீட்டுக் கோவை காணாமல் போதல், அறிக்கையிடப்பட்ட மதிப்பீட்டு பெறுமதிகளில் அசாதாரண ஏற்றத்தாழ்வுகள் தொடர்பாக

	எடுப்பதற்காக, 2016 திசெம்பர் 15 ஆம் திகதியிடப்பட்டு வழங்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையின்படி மாதாந்த வாடகை ரூபா. 1,250,000/- என மதிப்பிடப்பட்டு அறிக்கையிடப்பட்டிருந்தது. அதே கட்டிடத்திற்காக, 07 வருடங்களுக்குப் பின்னர், 2024 பெப்ரவரி 14 ஆம் திகதியிடப்பட்டு வழங்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையின்படி மாதாந்த வாடகை ரூபா. 800,000/- என மதிப்பிடப்பட்டு அறிக்கையிடப்பட்டிருந்தது. அதாவது, ஆரம்ப மதிப்பீட்டு பெறுமதியை விட 36 சதவீதம் குறைவாக மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இது குறித்து மேலதிகமாகப் பரிசோதனை செய்வதற்காக 2016 ஆம் ஆண்டுக்கான மதிப்பீட்டு கோவை கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.	ஆரம்ப வாடகைப் பெறுமதி குறித்தும் அந்தக் கோப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டாவது வாடகை மதிப்பீடு மேற்கொள்ளப்பட்ட போது, கட்டிடத்தின் தற்போதைய பயன்பாடு, குத்தகைதாரரால் மேற்கொள்ளப்படும் பராமரிப்புப் பணிகள், அதே குத்தகைதாரர் மீண்டும் குத்தகைக்கு எடுப்பதன் காரணமாக மேற்கொள்ளப்படும் குறைப்புக்கள் (Sitting Tenancy தொடர்பான சரிசெய்தல்கள்) மற்றும் கட்டிட உரிமையாளர் எதிர்பார்க்கும் வாடகை குறித்தும் கருத்தில் கொள்ளப்பட்டு அறிக்கையிடப்பட்டுள்ளது.	முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.
(இ)	2022 மே மாதம் 09 ஆம் திகதி நாட்டில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களால் பாராளுமன்றப் பிரதிநிதி-களின் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதங்களுக்காக மதிப்பீட்டு அறிக்கைகள் வழங்கப்பட்டமை தொடர்பான மாதிரிப் பரிசோதனையின்படி, சம்பந்தப்பட்ட ஆரம்ப மதிப்பீட்டு அறிக்கைகள் வழங்கப்பட்டதன் பின்னர், அமைச்சரவைத் தீர்மான-ங்கள் மற்றும் சனாதிபதி உத்தரவுகள், மாவட்டச் செயலாளர்/பிரதேச செயலாளர்களின் கோரிக்கைகள் மற்றும் சொத்து உரிமையாளர்-களின் கோரிக்கைகள் என்பவற்றைக் கருத்திற்-கொண்டு பிரதம மதிப்பீட்டாளரால் அந்த மதிப்பீட்டுப் பெறுமதிகள் 22	2022 மே மாதம் 09 ஆம் திகதி நாட்டில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் சொத்துச் சேதங்களை மதிப்பீடு செய்து அறிக்கையிடுமாறு மாவட்டச் செயலாளர் /நீதிமன்றங்கள்/ பொலிஸாரி-னால் விடுக்கப்பட்ட கோரிக்கைகளின் பேரில், 2022 மே மாதம் 09 ஆம் திகதியை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு அறிக்கையிடப்பட்டுள்ளது. அமைச்சரவைக் குறிப்பு இல. PS/NC/ACD/98/2023 இன் பிரகாரம் 2023.02.24 ஆம் திகதியிடப்பட்ட சனாதிபதியின் உத்தரவின்படி, தற்போதைய சந்தைப் பெறுமதிக்கு ஏற்றவாறு ஒரு மாத காலப்பகுதிக்குள் மீள் மதிப்பீடு செய்து அறிக்கைகளைச்	மதிப்பீடுகளில் அசாதாரண ஏற்றத்தாழ்வுகளை அடையாளம் காணுவதற்கும், பொருத்தமான நிறுவன நடவடிக்கைகளை தாபிப்பதற்கும் நடவடிக்கை எடக்கப்படுதல் வேண்டும்.

சதவீதம் முதல் 158 சதவீதம் வரையிலான வீச்சில் அதிகரிக்கப்பட்டு அறிக்கையிடப்பட்டிருந்தன. அதன்படி, 16 மதிப்பீடுகளுக்குரிய ஆரம்ப மதிப்பீட்டு அறிக்கைகளுடன் ஒப்பிடுகையில், இரண்டாவது மதிப்பீட்டு அறிக்கையினால் மதிப்பீட்டுப் பெறுமதிகளின் மொத்தமானது ரூபா. 384,081,900/- இலிருந்து ரூபா. 580,153,100/- ஆக 51 சதவீத அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது	சமர்ப்பிக்குமாறு பிரதம மதிப்பீட்டாளருக்கு வழங்கப்பட்ட கட்டளையின்படி, மேன்முறையீடு செய்த தரப்பினரின் மேன்முறை-யீட்டில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் மற்றும் 2024 பெப்ருவரி அளவில் கட்டிட நிர்மாண மூலப்பொருட்களின் மாறிய செலவு வேறுபாடுகளைக் கருத்தில்கொண்டு ஆரம்ப மதிப்பீடு திருத்தப்பட்டுள்ளது. விடயத்திற்குட்பட்ட சொத்துக்களின் தன்மை மற்றும் கட்டுமானத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட மூலப்பொருட்கள் மற்றும் பொருத்தப்பட்டிருந்த சாதனங்களை மீண்டும் பிரதியீடு செய்வதற்குச் செலவிடப்படும் தொகையையும் கவனத்தில் கொண்டு திருத்தப்பட்ட மதிப்பீடு அறிக்கையிடப்பட்ட-போது அதிகரிப்பின் சதவீதம் வேறுபட்டுள்ளது.

5. மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் முடிவில், திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி நிலைகளின் (1,191) எண்ணிக்கை-யில் 391 அல்லது 32 சதவீதமானவை வெற்றிடங்களாகக் காணப்பட்டன. அதன்படி, செயலாற்றுகையின் மீது நேரடியாகப் பாதிப்பை ஏற்படுத்தும் சிரேஷ்ட மட்டம் மற்றும் மூன்றாம் நிலை அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையில் முறையே 59 சதவீதம்	உதவி மதிப்பீட்டாளர் பதவிக்கு 184 பேரை ஆட்சேர்ப்பு செய்த பின்னர், நிறைவேற்று அதிகார மட்டத்தில் உள்ள இலங்கை மதிப்பீட்டாளர் சேவையின் I ஆம் வகுப்பின் III ஆம் தரத்தில் உள்ள மதிப்பீட்டாளர் பதவிக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது தேவையான வகையில் பதவியணி திருத்தம் செய்வதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

மற்றும் 38 சதவீதம் வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும், அந்த வெற்றிடங்கள் உட்பட அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பவோ தேவைக்-கேற்ப அங்கீகரிக்க-ப்பட்ட ஊழியர்களை திருத்தியமைக்கவோ திணைக்களம் 2025 மே 31 வரை முறையான நடவடிக்கை எடுக்கவில்லை.

மூன்றாம் நிலையைச் சேர்ந்த வெற்றிடங்கள்

களஃஅலுவலக உத்தியோகத்தர் தொகுதி 2, II ஆம் வகுப்பின் II ஆம் தரத்திலுள்ள உதவி மதிப்பீட்டாளர் பதவிக்கு 184 பேரை ஆட்சேர்ப்பு செய்வதற்கான அனுமதியின்படி, 2025.04.20 ஆம் திகதி இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால் எழுத்துமூலப் பரீட்சை நடாத்தப்பட்டது.

இரண்டாம் நிலை மற்றும் ஆரம்ப நிலையைச் வெற்றிடங்கள்

இரண்டாம் மற்றும் ஆரம்ப மட்டத்திலுள்ள வெற்றிடங்-களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பொது நிர்வாக அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.